## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.89/2018** **Date:09.11.2023**
**(P.W– 1)**

திருமதி.மணியரசி க/பெ.பாலகிருஷ்ணன்.
**1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். என் அப்பா ஆர்.கே.ராமசாமி என்றால், சரிதான். தாவா சொத்து 15.07.1993ல் கிரையம் வகையில் சுயராஜிதமாக என் அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி கோபால் என்பவர் ராமசாமியின் 2ம் மருமகன் என்றால், சரிதான். ராமசாமிக்கு எத்தனை மக்கள் என்றால், 3 ஆண்கள், 6 பெண்கள் ஆவர். என் அப்பா மதுக்கரை, கோயமுத்துரில் குடியிருந்தார் என்றால், சரிதான். மேற்படி விலாசம் சொல்லிதான் 1993ல் என் அப்பா கிரையம் பெற்றார் என்றால், சரிதான். மேற்படி விலாசத்தை சொல்லிதான் 15.07.1996ல் முருகேசனுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. என் அப்பா திருநெல்வேலிக்கு மாறி சென்றுள்ளார் என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

2. 1ம் பிரதிவாதிக்கு பொருளாதார சிக்கல் ஏற்பட்டது என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இந்த வழக்கிற்கு முன்பாக என் அப்பா அறிவிப்பு கொடுத்த போது அதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்க தெரியுமா என்றால், தெரியும். மேற்படி பதில் அறிவிப்பில் சொத்துக்களை முறையாக கிரையம் பெற்றதாக கூறியுள்ள விவரம் தெரியும் என்றால், சரிதான். ஆனால் கிரையம் பெற்றதாக சொல்வது பொய். என் அப்பாவுக்கு படிப்பறிவு இல்லை. என் அப்பா இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பாக எந்த அறிவிப்போ, காவல் நிலையத்தில் புகாரோ அளிக்கவில்லை என்றால், 20.02.2009ல் அவிநாசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. என் அப்பாவிடம் 1ம் பிரதிவாதி கோபாலுக்கு பணம் வேண்டும் என்று கடன் வாங்கி கொடுக்க சொன்னதாக சொல்வதற்கான ஆதாரம் உள்ளதா என்றால், இல்லை.

3. 5ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் பத்திர எழுத்தர் என்றால், அது எங்களுக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி தான் பணம் கொடுப்பவர் என்று அங்கு கூட்டி சென்றார். ஆர்.கே.ராமசாமி என்று என் அப்பா ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வார் என்றால், சரிதான். தாவா சொத்தை விற்க வேண்டும் என்ற முடிவில் தான் ராமசாமி அவருடைய இடமான தாவா சொத்தையும், 1ம் பிரதிவாதி அவருடைய இடத்தையும், ஆக இருவரும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு 15.07.1996 தேதியில் கிரையம் கொடுத்தார்கள் என்றால், சரியல்ல. லோனுக்கு பாதுகாப்புக்காக எழுதிக்கொடுத்தாக தற்போது பொய் சொல்கிறோம் என்றால், சரியல்ல. 15.07.1996 முதல் 2009 ஜனவரி வரை தாவா சொத்துக்கு வில்லங்கம் போட்டுப் பார்க்கவில்லை என்றால், போட்டுப்பார்த்தோம். அதற்கு பின்னிட்டு நாங்கள் எந்த இடத்திலும், வருவாய் அலுவலரிடமும், பதிவாளரிடமோ புகார் கொடுக்கவில்லை என்றால்,சரியல்ல. புகார் கொடுத்துள்ளோம். மேற்படி புகார் கொடுத்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால், இல்லை.

4. முழுமனதுடன் சொத்தை கிரையம் கொடுத்துவிட்டோம் என்பதால் தான் 13 வருட காலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கில் என் அப்பா ஆள்மாறாட்டம் செய்து கிரையம் செய்துவிட்டதான சொல்லியுள்ளார் என்றால், சரிதான். என் அப்பா சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. பத்திர எழுத்தர் 5ம் பிரதிவாதி வீட்டில் தான் எழுதிக்கொடுத்தார். என்ன என்று என் அப்பா எழுதிக்கொடுத்தார் என்றால், எதுவும் எழுதப்படாத பேப்பரில் தான் கையெழுத்து போட்டுக் கொடுத்தார். வழக்கிற்கு முன்பாக 5, 6 பிரதிவாதிகளின் பெயரில் புகார் கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால், இல்லை.

(சாட்சிக்கு உடல்நிலை சரியில்லை என்று சாட்சி கூறியதால் சாட்சியின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.11.09 20:46:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.